**செய்தி வெளியீடு: 711** **நாள் 13.10.2009**

## சென்னைக் குடிநீர் வாரியம்

### செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் பணிபுரியும் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவுப் பணியாளர்களுக்கு போனஸ் சட்டத்தின்படி சம்பள உச்சவரம்பிற்கு விலக்களித்து 2008–2009 ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியப் பணியாளர்களுக்கு முதன் முறையாக 8.33 சதவீத போனஸ் மற்றும் 1.67 சதவீத கருணைத் தொகை வழங்கப்படும்.

இந்த ஆணையின்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் பணிபுரியும் 3 ஆயிரத்து 210 பணியாளர்களுக்கு மொத்தம் 1 கோடியே 31 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

**வெளியீடு . இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**